DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC:239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw10 |
| Name | : | செல்வமணி |
| Father's / Husband's Name | : | ராமன் |
| Age | : | 45 |
| Religion | : | இந்து |
| Calling | : | DTP Work |
| Caste | : | வன்னியர் |
| Village | : | 144 நாவலர் தெரு, கடப்பேரி, வாலாஜா. |
| Date | : | 08.10.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது டி.டி.பி. சென்டர் வைத்து தொழில் செய்கிறேன். நான் தற்போது வாலாஜா பூசாலி பச்சையப்பன் தெருவில் மேற்படி கடையை வைத்துள்ளேன். மேற்படி கடையை செல்வா டி.டி.பி. சென்டர் என்ற பெயரில் கடந்த இருபது வருடங்களாக நடத்தி வருகிறேன். சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு வாலாஜாவை சேர்ந்த ஒரு கோட்டீஸ்வரன் என்ற பத்திர எழுத்தர் என்னிடம் முத்திரை தாள்கள், சில விவரங்களை கொடுத்து ஒரு ஆவணமாக தட்டச்சு செய்து தருமாறு கேட்டார். மேற்படி ஆவணத்தை அவர் சொல்லியதுபோல் தமிழில் தட்டச்சு செய்து அதற்குண்டான தொகையை பெற்றுக்கொண்டு அவர் கொடுத்த பத்திரத்தில் தட்டச்சு செய்து ஆவணத்தை அவரிடம் கொடுத்தேன். இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் தமிழில் தட்டச்சு செய்த ஆவணம்தான். மேற்படி ஆவணத்தின் பக்கங்கள் இந்த வழக்கில் முறையே அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக மொத்தம் ஐந்து பக்கங்கள் கொண்ட ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.)

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

மேற்படி வழக்கு ஆவணத்தை தட்டச்சு செய்யும்போது நான் பேருந்து நிறுத்தத்தின் பின்புறம் கடை வைத்திருந்தேன். நான் இருபது ஆண்டுகளாக இந்த டி.டி.பி. சென்டர் வைத்து தொழில் செய்கிறேன். கோட்டீஸ்வரன் என்பவரை இன்றைய

தினத்திலிருந்து பதினைந்து வருடத்திற்கு முன்பே தெரியும். நானே தட்டச்சு செய்வேன். கோட்டீஸ்வரன், தாளில் தனியாக எழுதிக் கொடுத்ததை பார்த்துதான் நான் தட்டச்சு செய்தேன். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட பத்திரத்தை தட்டச்சு செய்வதற்கு முன்பும் கோட்டீஸ்வரன் கொடுத்த பத்திரங்களை நான் தட்டச்சு செய்திருக்கலாம், எனக்கு ஞாபகம் இல்லை. முத்திரை தாள்களை அவர்தான் ஆவணமாக தட்டச்சு செய்ய கொண்டு வந்தார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்பட்ட தாள்களை கோட்டீஸ்வரன் தான் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட ஆவணத்தில் உள்ள தட்டச்சு எழுத்துரு “குருதி பான்ட்ஸ்”. மேற்படி ஆவணத்தில் உள்ளது “மங்கை பான்ட்ஸ்” என்றால் இருக்கலாம். அந்த ஆவணத்தில் கணிப்பொறியில் தட்டச்சு செய்தவர் என்று கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நீங்கள் கணிப்பொறியில் தட்டச்சு செய்திருந்தால் கையெழுத்து போட்டிருப்பீர்கள் என்றும் தட்டச்சு செய்ததாக பொய் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உண்மையாக அவ்வாறு தட்டச்சு செய்திருந்தால் தட்டச்சு செய்த பக்கங்களின் எண்ணிக்கை போட்டிருப்பீர்கள் என்றும் போலிஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எத்தனை ரூபாய் மதிப்புள்ள முத்திரை தாள்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னை வேலூர் சி.பி.சி.ஐ.டி. போலிஸார் அவர்கள் அலுவலகத்தில் வைத்துதான் விசாரித்தார்கள். அப்போதுதான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். இந்த வழக்கில் என்னிடம் காண்பிக்கப்பட்ட பத்திரன் சம்மந்தமாகத்தான் விசாரித்தார்கள். மேற்சொன்னவாறு தட்டச்சு எதுவும் செய்யவில்லை என்றும் காவல் துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தட்டச்சு செய்ததாக பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.